# சிலம்பில் நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கு

# Influence of Folk Literature on Silampu

***ஆ. மலர்விழி***
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்

**ஆய்வுச்சுருக்கம்**

*மண்ணின் மைந்தர் தம் மனக் கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான உணர்ச்சி வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். மொழியின் தோற்றம் உருவான போதே வாய்மொழி இலக்கிய வகை கருக்கொண்டது எனக் கூறலாம். உலகில் முதலில் மொழியும் அடுத்து வாய்மொழி இலக்கியங்களும் அதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் முகிழ்த்தன எனக் கொள்ளலாம். நாட்டுப்புற இலக்கியங்கள் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், புராணக் கதைகள் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ் அனைத்து நாட்டுப்புற இலக்கியக் கூறுகளும் காப்பியங்களில் நிறைந்து காணப்படுகின்றன. குறிப்பாக சிலப்பதிகாரத்தில் கடவுள் வாழ்த்து, தெம்மாங்கு, வரிப்பாடல்கள், குரவைப் பாடல்கள், நாடோடி நடனங்கள், சில நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்குடன் விளங்குவதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்*

***முக்கியச் சொற்கள்:***

*நாட்டுப்புற இலக்கியங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், புராணக் கதைகள், வாய்மொழி இலக்கியம், எழுதப்பட்ட இலக்கியம்*

**A. Malarvizhi**
*Ph.D Research Scholar, Department of Tamil*
*Bharathiyar University*
*Coimbatore*

**Abstract**

*Folk literature is the true emotional expression of the soul wandering in the womb of the earth. It can be said that the oral literary genre was conceived when the origin of language originated. The world's first language and then oral literature and subsequent written literature can be considered to have flourished. Folk literature is categorised as Folk literature, folk songs, stories, anecdotes, proverbs, legends, myths. All these folk literary elements abound in the epics. The purpose of this article is to examine the influence of folk literature on folk greetings, lines, hymns, folk dances, certain beliefs and customs, especially in Silappathikaram.*

**Keywords:**

*Folk literature, folk songs, mythology, oral literature, written literature*

**Citation**

Malarvizhi, A. "Influence of Folk Literature on Silampu." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 1, 2021, pp. 42–46.

**கடவுள் வாழ்த்து**

*சிலப்பதிகாரத்தில் வருகின்ற மங்கல வாழ்த்துப் பாடலான,*

***திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!***
***ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!***
***மாமழைப் போற்றுதும்! மாமழைப் போற்றுதும்!***

*என்று தொடங்கும் பாடல்கள் நாட்டுப்புற மக்கள் இயற்கையைப் போற்றும் இறை வழிபாடுகளையே எதிரொலிக்கின்றன. இவ் வழிபாடுகள் பழங்கால மக்களின் வழிபாட்டு எச்சங்கள், கிரேக்க, ரோமானிய தெய்வ வணக்கங்களோடு ஒத்துப் போவன என்பார் திரு. நா.வானமாமலை.*

**மண வாழ்த்துப் பாடல்**

*கோவலன், கண்ணகி திருமண விழாவின் போது மணமக்களை வாழ்த்தும் பொருட்டு மங்கையர் அனைவரும் ஒன்று கூடி வாழ்த்துப் பாடல்கள் பாடுகின்றனர்.*

***காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்***
***தீது அறுக என ஏத்திச், சின்மலர் கொடுதூவி…!***

*என வரும் இவ்வாழ்த்துப் பாடல்கள் நாட்டுப்புறப் புற மக்களின் மண வாழ்த்துப் பாடல்களைப் போலவே காணப்படுகின்றன.*

***ஆல்போல் தழைத்து***
***அருகு போல் வேரூன்றி***
***நலமுடன் எந்நாளும்***
***ஞானமுடன் வாழ்ந்திடுவீர்…!***

*என்ற பாமர வாழ்த்தின் வளர்ச்சி நிலையே சிலம்புப் பாடல், என்பதை நன்கு உணர முடிகின்றது.*

*தெம்மாங்கு*

***மாசு அறு பொன்னே! வலம்புரி முத்தே!***
***காசு அறு விரையே!கரும்பே! தேனே!***
***……..***
***மலையிடைப் பிறவா மணியே என்கோ?***
***அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?***

*என்று வரும் பாடல், கோவலன் கண்ணகியை வருணிக்கும் அகப்பாடல்களாக எட்டிலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இதே அகப்பாடல்கள் எவ்வித இலக்கணக் கட்டுப்பாடுகளும் இல்லாமல், நாட்டுப்புறக் காதல் பாடல்களாகவும் தெம்மாங்கு பாடல்கள் என்ற அடிப்படையிலும் முன்னரே வாய்மொழியாகப் பாடப்பட்டவையே!*

***கட்டாணி முத்தோ - நீ***
***கற்கண்டோ சர்க்கரையோ?***
***தொட்டாலே போதுமடி - சின்னத்தங்கம் என்***
***தொந்தரவு நீங்குமடி…!***

*இப்பாடல் நாட்டுப்புறத்தில் வாழும் எளிய மக்களின் நெஞ்சத்தில் மலரும் தூய காதலையும் இன்ப உணர்வையும் மிக அழகாகப் பதிவு செய்கின்றது. இப்பாடல் வகைகளே செப்பனிடப்பட்டு, தெம்மாங்குச் சுவையுடன் சிலம்பிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**வரியும் குரவையும்**

*நாடோடிப் பாடல்களின் உருவத்தை இலக்கியம் படைத்த புலவர்களும் எடுத்தாண்டார்கள் என்பதற்கு இப்போது கிடைப்பனவற்றுள் பழைய எடுத்துக்காட்டு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பாடிய வரிப்பாடல்கள் என்பார் திரு.கி.வா.ஜகன்நாதன். இவை பண்ணத்தியான நாடோடிப் பாடல்களைப் போலே அமைந்தவை. வரிப்பாடல்கள் தெய்வம் சுட்டுவன, மக்கட் சுட்டுவன என இரு வகையாகப் பாடப்பட்டுள்ளது.*

***திங்கள் மாலை வெண்குடையான்***
***சென்னி செங்கோல் அது ஒச்சிக்***
***கங்கை தன்னைப் புணர்ந்தாலும்***
***புலவாய் வாழி காவேரி...! ( கானல் வரி)***

*இக் கானல் வரிப்பாடலில் கோவலன் காவிரியை பெண்ணாக நினைத்து, உன் கணவனாகிய சோழன் கங்கையைக் கூடினாலும், உன் பெருங்கற்பு நெறி காரணமாக உன் கணவனை வெறுக்காமல் இருக்கின்றாயே! என்று பாடுகிறான். இப்பாடலின் பொருண்மை, தன் கணவரின் பரத்தையர் உறவை பொறுத்துக் கொண்டு வாழும் பாமரப் பெண்ணின் மன உணர்வை பதிவு செய்யும் நாட்டுப் பாடலின் மறு உருவாகவே நமக்குத் தோன்றுகிறது.*

*வேட்டுவவரியானது நாட்டுப்புற இலக்கியத்தின் சிறு தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் கோடங்கி (அ) உடுக்கைப் பாடல்களின் தன்மையை ஒத்து காணப்படுகிறது.*

***பழங் கடன் உற்றமுழங்கு வாய்ச் சாலினி***
***தெய்வம் உற்று மெய்ம்மயிர் நிறுத்துக்***
***கை எடுத்து ஒச்சிக் கானவர் வியப்ப...! (வேட்டுவவரி)***

*இவ்வேட்டுவ வரியானது தெய்வம் ஏறப்பெற்ற (சாலினி) ஒரு பெண்ணின் நிலையைப் பதிவு செய்கிறது. இவற்றில் பாமர இலக்கியத்தின் செல்வாக்கு மிகுந்து காணப்படுவது கண்கூடு. ஊர்ச்சூழ் வரியானது நாட்டுப்புற இலக்கியத்தின் ஒப்பாரிப் பாடலைப் போல் அவலச் சுவை மிகுந்து அமைக்கப்பட்டுள்ளது.*

***பட்டேன் படாத துயரம் படுகாலை***
***உற்றேன் உறாதது உறுவனே - ஈது ஒன்று (ஊர்ச்சூழ் வரி)***

*இப்பாடலில் கோவலனை இழந்து வாடும் கண்ணகியின் புலம்பல் (துயரம்) பாமர ஒப்பாரிப் பாடலின் ஏட்டுறுவாக வளர்ச்சி பெற்றிருப்பதை உணர முடிகின்றது. மேலும் சிலம்பின் அம்மானைப் பாடல்கள் கழற்சிப் பாடல்களையும், கந்துக வரிப் பாடல்கள் பந்தாட்டப் பாடல்களையும், ஊசல் வரியானது ஊஞ்சல் பாடல்களையும் நினைவூட்டுகின்றன. குரவைப் பாடல்களில் ஆய்ச்சியர் குரவையானது ஆயர்பாடிக் கண்ணனைப் புகழ்ந்து பாடும் பாடல்களாகவும், பாமர வழிப்பாட்டுப் பாடலின் மறு வடிவமாகவும் திகழ்கின்றது.*

***என்றென்றும் காணேம் புலத்தல் அவர்மலைக்***
***கற்றீன்றி வந்தப் புதுப்புனல்***
***கற்றீன்றி வந்தப் புதுப்புனல் மற்றையார்***
***உற்றாடின் நோம் தோழி நெஞ்சன்றே! (குன்றக்குரவை)***

*என்ற குன்றக் குரவையில் இரண்டாவது அடியே மூன்றாவதிலும் திரும்ப வருகின்றது. இப்பாடல்களின் அமைப்பில் எளிமையும், இனிமையும், திரும்ப வரலும் என நாட்டுப்புறப் பாடலின் பதிப்பும், பாதிப்பும் நிறைந்துள்ளன.*

**நாடோடிக் கதைகள்**

*நாட்டுப்புற இலக்கியக் கதைகள் போன்று மாலதி கதை, பார்ப்பினி கதை, குரங்குக் கை வானவன் கதை, இராமன் கதை, நளன் கதை, கற்புடைய மகளிர் கதை, சிபிக் கதை, மனுநீதிச் சோழன் கதை, பொற்கைப் பாண்டியன் கதை, வார்த்திகன் கதை, கோவலனின் முற்பிறவிக் கதை எனப் பல்வேறு கதைகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன.*

**நாடோடி நடனங்கள்**

*நாட்டுப்புறவியலின் ஒரு வகையான நாட்டுப்புறக் கலைகளில் இடம்பெறும் கூத்து வகை நடனங்கள் பெரிதும் இடம்பெறுவது சிலம்பில் மட்டுமே. எடுத்துக்காட்டாக இந்திராணியின் கடையக் கூத்து, மன்மதனின் பேடிக் கூத்து, திருமகளின் பாவைக் கூத்து, திருமாலின் குடக்கூத்து, மல்லின் ஆடல், கண்ணனின் அல்லியக் கூத்து, முருகனின் குடைக் கூத்து மற்றும் துடிக்கூத்து, கொற்றவையின் மரக்கால் கூத்து, சிவபெருமானின் கொடுகொட்டி மற்றும் பாண்டரங்கம் எனப் பல்வேறு ஆடல்கள் பற்றிய குறிப்புகள் மிகுந்து காணப்படுகின்றன. இவை அனைத்துமே பாமர நடனங்களின் வளர்ச்சி நிலையே!*

**நாட்டுப்புற நம்பிக்கைகள்**

*முற்பிறவி, மறுபிறவி, தானத்தின் பயன், குறைகளை தீர்க்கத் தீர்த்தம் ஆடல், தெய்வம் குழந்தையாதல், பிணம் தின்னும் பேய், தீய நிமித்தங்கள், சாபமும் சாப விமோசனமும், வேலன் வெறியாடல், கண் துடித்தல், கனவுப்பலன் போன்ற பாமர மக்கள் கடைப்பிடிக்கும் அத்தனை நம்பிக்கைகளும் சிலம்பில் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. இவையும் சிலம்பின் நாட்டுப்புறச் செல்வாக்குக்கு தக்க சான்றாக அமைகின்றது.*

*இவ்வாறு சமுதாயக் காப்பியம், குடிமக்கள் காப்பியம் எனப் பெயர்பெற்ற சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கு மிகுந்துள்ள இடங்களைக் காணும் பொழுது, இளங்கோவடிகள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த நாட்டு மக்களின் இனிய எளிய வாழ்வினைச் சிலம்பின் மூலம் நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றார் என்பதை நம்மால் உணர முடிகின்றது.*

**துணை நூல்கள்**


1. *சிலம்பொலி சு. செல்லப்பன். சிலப்பதிகாரம், தெளிவுரை.*
2. *சு. சக்திவேல். நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம்.*
3. *கி. வா. ஜகன்நாதன். மலையருவி*

4. *நா. வானமாமலை. தமிழர் நாட்டுப் பாடல்கள்.*
5. *முனைவர். சு. சண்முகசுந்தரம். நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு.*

## References

1. Silampoli S. Sellappan. *Silappathikaram*, Thezhivurai.
2. S. Sakthivel. *Nattuppuraviyal Oru Arimugam*.
3. K.V. Jagannathan. *Malaiyaruvi*.
4. N. Vanamamalai. *Tamizhar Nattu Padalkal*.
5. Dr. S. Sanmugasundaram. *Nattuppura Ilakkiyathin Selvakku*.